Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register CC. 257/2016
Sessions prosecution
depositions of witness for PW6 chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 11.49 am – 12.13 Pm |
| Name | : | திரு. உமர் |
| Father name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 9th day of April 2026.
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )
**முதல் விசாரணை:**

நான் தற்போது மத்திகிரியில் குடியிருந்து வந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். 2008-ம் வருடம் ஆஜர் எதிரி நாராயண சாமி சுந்தரம் பேசனர்ஸ் கடையில் மெட்ரில்ஸ்களை திருடி கௌமங்கலம் சாலையிலுள்ள ஸ்கேர்ப் கடையில் போட்டிருந்தார். 2008-ம் வருடம் மேற்படி எதிரி நாராயண சாமி திருடிய பொருட்களை போலிசார் கௌமங்கலம் சாலையிலுள்ள ஸ்கேர்ப் கடையில் வைத்து என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். 2008-ம் வருடம் நானும், எதிரியும் சுந்தரம் பேசனர்ஸ்

நிறுவனத்தில் டிரைவர்களாக வேலை பார்த்தோம். அப்போதிலிருந்து எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். என்னுடன் வெங்கேடஷ் என்பவரும் சாட்சியா கையொப்பம் செய்தார். (**என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி திருடிய பொருட்களை ஒரு டெம்போவில் எடுத்து சென்ற விவரம் எனக்குதெரியும் என்றால் சரிதான். அந்த டெம்போவை போலிசார் என் முன்னிலையிலும், வெங்கடேஷ் முன்னிலையிலும் கைப்பற்றினார்கள் என்றால் சாட்சி முதலில் ஒரு டெம்போ 407 வாகனம் இருந்தது என்றும், தற்போது ஞாபகம் இல்லை என்றும் கூறுகிறார். கடந்த 20.10.2008-ம் தேதி காலை 09.00 மணிக்கு கௌமங்கலம் ஜங்சன் பிரிவு ரோடு அருகே எதிரி இவ்வழக்கில் பயன்படுத்திய KA 05 AD 0011 என்ற டெம்போவை அதன் உரிமையாளர் அப்துல்நிசாத் என்பவரிடமிருந்து கைப்பற்றிய போது நானும், வெங்கடேஷ் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரி என்னுடன் பணிபுரிந்த என்னுடைய நண்பர் என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் ஏதாவது எழுதினார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்தை எங்கு வைதது போட்டேன் என்றால் மத்திகிரி காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். நான் கையொப்பம் போடும் போது வெங்கடேசும் கையொப்பம் போட்டார என்றால் சரிதான் . நான் கையொப்பம் செய்த தாளில் என் னவிவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால்

தெரியாது. என்னையும், வெங்கடேஷ்யும் தவிர வேறு யாராவது கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை. நான்கையொப்பம் செய்யும் போது காவல் நிலையத்தில் அப்துல் நிசாத் என்ற நபர் இருந்தாரா என்றால் இல்லை. மத்திகிரி கூட் சாலையில் நான் கையொப்பம் எதுவும செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

ஓம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.